09th
JUNE
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 34 | பக்கங்கள் - 11 | editor.uthayam@gmail.com



# சவூதி மன்னரின் அழைப்பை ஏற்று 2300 பேர் ஹஜ் கடமை

## இலங்கையிலிருந்து 20 பேர் பயணம்

இம்முறை சவுதி அரேபிய மன்னர் பஹத் பின் அப்துல் அஸீஸின் அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினர்களாக 2300 பேர் புனித ஹஜ் கடமையை

02ம் பக்கம்பார்க்க...



# இந் நாட்டின் சகலரும் முதற் தர குடி மக்களே

## 2ஆம், 3ஆம் தரம் எனது அரசில் கிடையாது

## 13 ஐயும் நடைமுறைப்படுத்துவேன்

## கிளிநொச்சியில் சஜித் திட்டவட்டம்

இந்நாட்டில் 1st class citizens, 2nd class citizen, 3rd class citizen என்ற வகைப்பாடுகள் எதுவும் இல்லை. எல்லோரும் ஒன்று போல

03ம் பக்கம்பார்க்க...



# நரேந்திர மோடி பிரதமராக பதவிப்பிரமாணம்

## பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு!

இந்தியாவின் அடுத்த பிரதமராக நரேந்திர மோடி இன்றிரவு உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டார். இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு முன்னிலையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் பிரதமராக பதவியேற்றுக் கொண்டது

03ம் பக்கம்பார்க்க...

# ஸ்மார்ட் வகுப்பறைகளை நிர்மாணிக்க 20 மில்லியன் ரூபா வழங்கும் சீனா

நாட்டின் பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைப்பதற்காக சீனா 3000 ஸ்மார்ட் பலகைகளை வழங்கவுள்ளது இதற்காக சீனா இலங்கைக்கு 20 மில்லியன் ரூபாவை உதவியாக

02ம் பக்கம்பார்க்க...

# தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி சிறுபான்மை இன நல்லிணக்க ஆணைக்குழு

## அரசியலமைப்பு ரீதியாக ஏற்பாடு செய்யவும் பாராளுமன்றத்தில் ஹரீஸ் எம்.பீ கோரிக்கை



கல்விசார் நியமனங்களிலும், கல்வி அதிகாரிகள் நியமனங்களிலும் பல பாரபட்சங்கள் நடைபெறுவதாக அறிகிறோம். இது போன்று பல இடங்களிலும் பல்வேறு அசௌகரியங்கள், பாரபட்சங்கள் நடைபெறுகிறது. எமது நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவற்றை மேன்முறையீடு செய்யவும், விரைவான தீர்வுகளை பெறவும் "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ

02ம் பக்கம்பார்க்க...




# மொட்டு ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நியமிக்குமாறு சம்பிக வேண்டுகோள்

## மஹிந்த பஷிலுடன் கலந்துரையாடல்

## பாராளுமன்ற தேர்தலே எமது நிலைப்பாடு; பஷில்

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நியமிக்குமாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...



# அல் ஆலீம் பரீட்சையை மீண்டும் நடாத்துவது குறித்து அவதானம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இடை நிறுத்தப்பட்டிருந்த அல் ஆலிம் பரீட்சையை மீண்டும்

02ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## ஸ்மார்ட்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவுள்ளது. இந்த 20 மில்லியன் ரூபா உதவி வழங்கும் ஒப்பந்தம் மிக விரைவில் கல்வி அமைச்சுக்கும் சீன அரசாங்கத்துக்கும் இடையே மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த திட்டத்தின் கீழ் சீனா 1500 ஸ்மார்ட் பலகைகளை பொருத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்கும். இதன்மூலம் 3000 பாடசாலைகள் நன்மை பெறும் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

இதற்கு மேலதிகமாக தொலைதொடர்பு ஆணைக்குழு 1500 ஸ்மார்ட் பலகைகளை 1250 பாடசாலைகளுக்கு வழங்க உள்ளது. ஆறாம் வகுப்பு முதல் பாடசாலைகளில் ஸ்மார்ட் வகுப்பறைகளை ஆரம்பிப்பதற்காகவே இந்த உதவி வழங்கப்பட இருக்கின்றது. பாடசாலைகளை டிஜிட்டல் மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த வசதிகள் செய்யப்படுவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இதற்குத் தேவையான ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு ஒன்லைன் மூலம் இந்த வசதி வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

## தமிழ்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பு ரீதியாக ஏற்பாட்டை செய்ய வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரை நிகழ்த்திய அவர்,

இப்படியான ஏற்பாடுகள் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருக்கிறது. எமது நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி "சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு" ஒன்றை நிறுவ பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்கித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவை அனுமதியுடன் மாகாண சபைகளினூடாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வரும் கல்வி அமைச்சு கிழக்கு மாகாணத்தில் கஷ்டப்பிரதேசங்களில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த தேவையை பூர்த்தி செய்ய அண்மையில் கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்ததும் துரதிஷ்டமாக அந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கூடுதலான ஆசிரியர்களை கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

## மொட்டு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பத்தரமுல்லையில் இருக்கின்ற பசில் ராஜபக்ஷவின் வீட்டில் சம்பிக்க ரணவக்க பசில் ராஜபக்ஷ வை சந்தித்து இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்ற நிலை இல்லாமல் இருப்பதை சுட்டிக்காட்டி தனக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார். பொதுஜன பெரமுன இன்னும் தனது ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்கவில்லை என்றும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க இது குறித்து என்ன தெரிவிக்கின்றார் என்பதை பொறுத்தே இந்த முடிவு எடுக்கப்படும் என்றும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சம்பிக்க ரணவக்க முதலில் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசியபோது இது தொடர்பாக பசில் ராஜபக்ஷ வுடன் பேசவேண்டும் என்று அவர் தெரிவித்திருந்தார். அதன்படியே பசில் ராஜபக்ஷவை சந்தித்து அவர் பேசியிருந்தார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகவும் பசில் ராஜபக்ஷ சந்திப்பின்போது சம்பிக்க ரணவக்கவிடம் தெரிவித்துள்ளார்.

## அல் ஆலிம்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துவது குறித்து கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றினை கல்வி அமைச்சு நியமித்துள்ளது.

இக் குழுவின் முதலாவது கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.அடுத்த ஓரிரு கூட்டங்களில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென குழுவின் ஆங்கத்தவரொருவர் தெரிவித்தார்.

## சவூதி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றுள்ளனர். இவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், உலமாக்கள், இஸ்லாமிய தொண்டர்கள் என பல்வேறு பிரிவினர் அடங்குகின்றனர்.

இவர்கள் சனியன்று அங்கு போய்ச் சேர்ந்தனர். மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதாக சவுதி அரேபிய தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையிலிருந்து இம்முறை 20 பேர் மன்னரின் அழைப்பில் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு சென்றிருந்தார்கள்.

அவர்களின் 6 பேர் நாட்டின் பல்கலைக்கழகங்களை சேர்ந்தவர்கள். 4 பேர் ஊடகவியலாளர்கள் ஏனையோர் ஒருவர் அமைச்சின் செயலாளர். இப்படி பலதரப்பட்டவர்கள் இந்த 20 பேரில் உள்ளடங்கியிருக்கின்றார்கள். இவர்கள் 15 நாட்கள் அங்கு தங்கிநின்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றி நாடு திரும்பவுள்ளார்கள்.







## இந் நாட்டின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சமமானவர்களே. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பர்கர்கள் உட்பட 220 இலட்சம் குடிமக்களும் 1st class citizen ஆகும். இதற்கான ஏற்பாடுகள் இல்லாததால், நிர்வாகத் துறையில் சட்டம் ஒழுங்கும் துறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டு யதார்த்தமாக நடைமுறைப்படுத்துவோம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 225 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கிளிநொச்சி, பாரதி வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (09) இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவில் உள்ள IIM, IIT போன்ற கல்வி நிறுவனங்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு எமது நாட்டிலும் இதுபோன்ற நிறுவனங்களை நிறுவி, சர்வதேச தரத்தில் அமைந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறுவனங்கள் நிறுவப்படும். இற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்பைக் பெற்றுக் கொள்ளுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பல்வேறு தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வழிகளில் வெவ்வேறு பொய்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி எப்போதுமே கூறிவருகின்றது. சர்வதேச தொழிலாளர் தினத்தன்றும் அந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. உயர் சட்டப் புத்தகத்திலுள்ள 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்படும். நாட்டின் வடக்கு, கிழக்கு, மேல் என 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்தத் தயங்கப் போவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் மூலம் இப்பிரதேச மக்களின் அரசியல், மத, சமூக, கலாசார உரிமைகள் வழங்கப்படும். நாட்டின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே உள்ளடங்கியுள்ளது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி இதில் பொருளாதார, சமூக, மத, சுகாதார, கல்வி உரிமைகள் வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

நாம் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம்

13 ஆவது திருத்தம் குறித்து பேசும் போது பல்வேறு தலைவர்கள், மேலே பார்த்துக் கொண்டு இருத்தல், கேட்காதது போல் நடந்து கொள்ளுதல், பிற தலைப்புகளைக் கொண்டு வருதல், பயப்படுதல் மற்றும் வெட்கப்படுதல் போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொண்டாலும், தான் நேராகப் பேசும் நபர் என்றபடியால், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன். சிங்களவர்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும், பர்கர்களாக இருந்தாலும், முஸ்லிம்களாக இருந்தாலும் ஒன்றாய் கைகோர்த்து, ஒரு தாயின் பிள்ளைகள் போல் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்படுமாறு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

ஏனையோர் பணியாற்றாத போது நாம் பணியாற்றி வருகிறோம்

பல்வேறு அரசியல்வாதிகள் வடக்கிற்கு வந்து அரசாங்கத்தின் வளங்களை பகிர்ந்தளித்தாலும், பல்வேறு நன்கொடையாளர்கள் வழங்கிய உதவிகளையே நான் வழங்கி வருகிறேன். எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகள் பணியாற்றாது இருந்தாலும், தானும் தனது குழுவும் பணியாற்றி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சிங்களம் மட்டுமே, தமிழ் மட்டுமே என சொல்லிக் கொண்டு தத்தமது வாக்குகளை அதிகரித்துக் கொள்ள முயலும் அரசியல்வாதிகளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்.

பிள்ளைகளின் எதிர்காலத்தை குறித்து சிந்திக்காமல் தமது வாக்குகள் குறித்து சிந்திப்பவர்களே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனது வாக்குகளை அதிகரித்துக் கொள்ளாமல், பிள்ளைகள் மற்றும் பாடசாலைகளுக்கு பெறுமானத்தை கூட்டிக் கொள்ளும் பணியையே முன்னெடுத்து வருகிறேன். எந்த இனத்துக்குச் சொந்தமான, எந்த மதத்துக்குச் சொந்தமான பிள்ளைகளாக இருந்தாலும் எந்தவித பேதமுமின்றி அனைத்துப் பிள்ளைகளையும் ஒன்றாகக் கருதி அவர்களின் எதிர்காலத்திற்கான முதலீடாகவே இந்த பணியை செய்து வருகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## நரேந்திர...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*குறிப்பிடத்தக்கது.*

*இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிப் பெற்றதையடுத்து மூன்றாவது முறையாகவும் நரேந்திர மோடி பாரதப் பிரதமராக சற்று முன்னர் உத்தியோகப்பூர்வமாக பதவிப் பிரமாணம் செய்துக்கொண்டார்.*

*டெல்லி குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று மாலை (09.06.24) பிரதமர் மோடி உத்தியோகப்பூர்வமாக பதவியேற்றார்.*

*ஜவஹர்லால் நேருவுக்குப் பின்னர் மூன்றாவது முறையாக பிரதமராகும் அங்கீகாரத்தை பிரதமர் மோடி பெற்று வரலாறு படைத்துள்ளார்.*

*ஜவஹர்லால் நேரு 1952, 1957 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ச்சியாக மூன்று முறை பாரத்தில் ஆட்சியமைத்தார்.*

*இதன்பின்னர் மோடி 2014, 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்றுமூன்றாவது முறையாகவும் பிரதமர் கதிரையை தன்வசப்படுத்தினார்.*

*உலகத் தலைவர்கள் பங்கேற்பு*

*பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் பதவியேற்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மலைத் தீவு ஜனாதிபதி முகமது மூயிஸ்,*

*சீசெசல்ஸ் துணை ஜனாதிபதி அகமது அஃபிப், மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜூக்னாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால் எனும் பிரசண்டா, பூட்டான் பிரதமர் ஷெரிங் தோப்கே ஆகியோர் பங்கேற்றனர்.*

*இந்திய - மாலைத்தீவு இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்ட நிலையில், பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்கான அழைப்பு மாலைத்தீவு ஜனாதிபதி முகமது மூயிஸிற்கு விடுக்கப்பட்டது.*

*அழைப்பை ஏற்று மாலைத்தீவு ஜனாதிபதியும் இந்த விழாவில் பங்கேற்றமை வியப்புக்குரியதாகும்.*






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JUNE 09 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## பாராளுமன்ற தேர்தல் முறை மாற்றம் இப்போது தேவையானதா?

இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தயாராகி வருவதாக தேர்தல் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க தேர்தல் நடத்தப்படுமா? உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைத்ததை போன்று ஜனாதிபதி தேர்தலும் ஒத்தி வைக்கப்படுமா? என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றதனை நாளாந்தம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஏழு மாதங்களே உள்ளன. உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்ததை போன்று ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைப்பது இலகுவான காரியமாக இருக்காது. நியாயமான காரணங்களின்றி ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைக்கப்படுமாயின் நாட்டில் இரத்த கலறி ஏற்படலாம் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டுவருவதற்கான உரிய சட்டமூலமொன்றை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது பாராளுமன்ற முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்தின் படி 160 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையிலும் 65 பேர் மாகாண அல்லது தேசிய மட்ட இன விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட உள்ளனர்.

தேசிய பட்டியல் முறையில் தற்போது 29 பேரே தெரிவு செய்யப்படுகின்றனர். புதிய முறைப்படி அது 65ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலிலுக்கு முன் இத்தேர்தல் முறையை மாற்றுவதற்கு போதிய காலம் உண்டா என்பதே கேள்வியாக உள்ளது. தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டால் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு புதிதாக தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபரில் நடத்தப்பட வேண்டும்.அதற்கு முன் பாராளுமன்ற தொகுதி முறையில் சீர்திருத்தம் செய்வது சாத்தியமானதல்ல என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். புதிய தேர்தல் முறை நாட்டில் பரவலாக காணப்படும் சிறுபான்மை சமூகங்களின் நலன்களை பாதிக்காத வகையில் அமையுமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமை குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டும்.எமது நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரும் ஒட்டுமொத்தமாக நாடு நன்மை பெறுவதனை விட தமது கட்சிக்கு வெற்றியை பெற்றுக் கொள்வதற்காக தேர்தல் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிப்பது வரலாற்று ரீதியாக இடம்பெற்று வருகின்றது. தற்போது நாட்டிலுள்ள விகிதாசார தேர்தல் முறை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவால் அறிமுகப்படுத்தப்பட்டமையானது, அவர் கட்சிக்கு சாதகமாக அமையும் என்பதனாலே.இம்முறை தேர்தல் முறையில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றமும் அவ்வாறான நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.அவசர அவசரமாக தேர்தல் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தவிர்த்து ஒக்டோபர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் வெற்றி பெறும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் இம்மாற்றங்களை அறிமுகப்படுத்துவதே சிறந்தது.

ஜனாதிபதி தேர்தலை வெற்றிக் கொள்வதற்காக இதனை பயன்படுத்தக் கூடாது.

## பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.

எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com

Whatsapp / Call:
070 239 7210




## “ரீ20 பரிசு மழையுடன் உதயம்”

**அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகியுள்ள ரீ20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளையொட்டி உதயத்தின் மாபெரும் பரிசுப் போட்டி.**

**இப் போட்டிக்கான கேள்விகளை எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எமது இணையதளம் மற்றும் பத்திரிகை ஊடாக அறிய முடியும்.**

**பெறுமதியான பரிசில்களைக் கொண்ட இப் போட்டியில் வயது வித்தியாசமின்றி அனைவரும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும்.**

***போட்டி விதிமுறைகள்:***

- 10 கேள்விகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாக்களும் உதயம் இணையதளம், வட்ஸ்அப் குழுமங்களூடாக பிரசுரிக்கப்படும்.
- இரண்டு தினங்களுக்கு ஒருமுறை வினா பிரசுரிக்கப்படும். (மொத்தமாக வினாக்கள் முடிவடையும் திகதி 23.06.2024)
- பங்குபற்றும் போட்டியாளர்கள் 10 கேள்விகளையும் ஒன்றாக சேர்த்து A4 தாளில் கேள்விகளையும், விடைகளையும் எழுதி அதனை தெளிவாக Scan செய்து ஒரே தடவையில் கீழுள்ள வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
- ஒரு போட்டியாளரின் விண்ணப்பம் ஒரு தடவை மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியாளர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை விடையனுப்பும் அதே தாளில் எழுதியும், வட்சப் இல் டைப் செய்தும் அனுப்ப வேண்டும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
- விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: ஜூன் 25 - 27 ஆம் திகதிகளுக்கிடையில் அனுப்பி வைக்கவும்.

**விடையனுப்ப வேண்டிய வட்ஸ்அப் இலக்கம்: 071 341 6350**

**மேலதிக விபரங்களுக்கு உதயம் விளையாட்டு செய்திப் பிரிவு: 077 87 51 032**



# இறை அச்சம் உடையோரின் பண்புகள்

**அல்குர்ஆன் - உள்ளங்களுடன் பேசுகிறது...**

பிராத்தனைக்கான வழிகாட்டல்கள்..

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (ஆரம்பிக்கிறேன்).

1. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன் தான்) அகிலத்தார் யாவரையும் படைத்து பரிபாலித்து பக்குவப்படுத்துபவன்.

2. (அவன் தான்) அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையவன்.

3. தீர்ப்பு நாளின் அதிபதி(யும் அவனே.)

4. (அல்லாஹ்வே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்” உன்னிடமே உதவியும் தேடுகிறோம்.

5. யாஅல்லாஹ்! எங்களை நேரான வழியில் நடத்துவாயாக!

6, 7. (அவ்வழி) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி. மேலும் அது (உன்) கோபத்திற்கு உள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல.

(அன்றி நபியே!) அவர்கள் உங்களுக்கு இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், உங்களுக்கு முன் (இருந்த நபிமார்களுக்கு) இறக்கப்பட்ட (வேதங்கள் யா)வற்றையும் நம்பிக்கை கொள்வார்கள். (நியாயத் தீர்ப்பு நாளாகிய) இறுதி நாளையும் (உண்மை என்று) உறுதியாக நம்புவார்கள்.(2:4)

இத்தகையவர்கள் தான் தங்கள் ரப்பின் நேரான வழியில் இருக்கின்றார்கள். இவர்கள் தான் நிச்சயமாக வெற்றிபெற்றவர்கள். (2:5)

**இறையச்சம்**

மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன் இருந்தவர்களையும் படைத்த இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறையச்சம். உடையவர்களாக ஆகலாம். (2:21)

**இணைவைப்பு**

அவனே பூமியை நீங்கள் வசிக்கும் இடமாகவும் வானத்தை ஒரு முகடாகவும் அமைத்து வானத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு (நீங்கள்) புசிக்கக் கூடிய கனிவர்க்கங்களையும் உங்களுக்கு வெளியாக்குகின்றான். ஆகவே (இவைகளையெல்லாம்) நீங்கள் தெளிவாக அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். (2:22)

**சுவர்க்கத்தின் இன்பங்கள்**

(நபியே!) எவர்கள் (இவ் வேதத்தை நம்பிக்கை கொண்டு (அதில் கூறப் பட்டுள்ளபடி) நற்செயல்கள் செய்கிறார்களோ நிச்சயமாக அவர்களுக்கு (சுவனபதியில்) சோலைகள் உண்டு என்று நீங்கள் நற்செய்தி கூறுங்கள். அவற்றில் நீர்அருவிகள் (தொடர்ந்து) ஓடிக் கொண்டே இருக்கும். அவற்றிலிருந்து (அவர்களுக்கு) ஒரு கனி புசிக்கக் கொடுக்கப்படும் போதெல்லாம் முன்னர் நமக்குக் கொடுக்கப்பட்டதும் இதுதானே! என (ஆச்சரியப்பட்டு)க் கூறுவார்கள். (ஏனென்றால்) பார்வைக்கு ஒரே விதமாகத் தோன்றக் கூடியவைகளையே கொடுக்கப் பெறுவார்கள்.(எனினும் அவை சுவையில் விதவிதமாக இருக்கும்.) பரிசுத்தமான மனைவிகளும் அங்கு அவர்களுக்குக் கிடைப்பார்கள். அன்றி அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள். (2:25)

**நஷ்டவாளிகளின் அடையாளம்**

அல்லாஹ்விடத்தில் (இவர்கள்) செய்த உடன்படிக்கையை இவர்கள் உறுதிப்படுத்திய பின்னும் அதை முறித்து விடுகின்றனர். எ (ந்த இரத்த சொந்தத்தைச் சேர்த்து நடக்கும்படி அல்லாஹ் கட்டளையிட்டானோ அதைப் பிரித்தும் விடுகின்றனர். பூமியில் விஷமம் செய்து கொண்டும் இருக்கின்றனர். இத்தகையவர்கள்தான் நஷ்டமடைந்தவர்கள்”. (2:27).

**விசாரணைவேளை**

(மனிதர்களே!) நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நிராகரிக்கின்றீர்கள் ? உயிரற்றவர்களாக இருந்த உங்களை அவனே உயிர்ப்பித்தான். பின்னும் அவனே உங்களை மரணிக்கச் செய்வான். பின்னும் அவனே உங்களை உயிர்ப்பிப்பான். அதன் பின்னும் நீங்கள் (உங்கள் செயல்களுக்குரிய கூலியை அடைவதற்காக) அவனிடமே (விசாரணைக்குக்) கொண்டு வரப்படுவீர்கள். ( 2:28).

**பொய்யும் உண்மையும்**

நீங்கள் உண்மையை அறிந்துகொண்டே அதனை மறைத்துப் பொய்யை உண்மையென புரட்டிவிட வேண்டாம். (2:42)

**தொழுகையும் ஸகாத்தும்**

நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள். ஸ காத்தை கொடுத்து வாருங்கள். (தொழுகையில் ஒன்று சேர்ந்து குனிந்து) ருகூஉ செய்பவர்களுடன் நீங்களும் குனிந்து ருகூஉ செய்யுங்கள் (2:43).

**கஷ்டமும் பொறுமையும்**

”(எத்தகைய கஷ்டத்திலும்) பொறுமையைக் கொண்டு தொழுது (இறைவனிடத்தில் உதவி தேடுங்கள்.ஆனால், நிச்சயமாக இது உள்ளச்சமுடையவர்களுக்கே அன்றி மற்றவர்களுக்கு) மிகப் பளுவாகவே இருக்கும். ( 2:45).

**உள்ளச்சம்**

(உள்ளச்சமுடைய) அவர்களோ தங்கள் இறைவனை நிச்சயமாக சந்திப்போம். என்றும், அவனிடமே நிச்சயமாக செல்வோமென்றும் உறுதியாக நம்புவார்கள் (2:46)

நீங்கள் ஒரு நாளைப்பற்றியும் பயந்து கொள்ளுங்கள். (அந்நாளில்) எந்த ஆத்மாவும் எந்த ஆத்மாவுக்கும் யாதொன்றையும் (கொடுத்து அதன் கஷ்டத்தைத்) தீர்க்க மாட்டாது. அதற்காக (எவருடைய) பரிந்துரையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரிகாரத்தையும் (ஈடாகப்) பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அன்றி அவர்கள் (எவராலும் எவ்வித)உதவியும் செய்யப்பட மாட்டார்கள் (2:48).

**மரணத்திற்கு முன்...**

அன்றி நீங்கள் தொழுகையைக் கடைபிடித்தும் , ஸகாத் கொடுத்தும் வாருங்கள். ஏனென்றால் (மரணத்திற்கு முன்னதாக உங்களுக்காக நீங்கள் என்ன நன்மையை முன்கூட்டி அனுப்பி வைப்பீர்களோ அதனையே அல்லாஹ்விடம் (மறுமையில்) பெற்றுக்கொள்வீர்கள் (ஆதலால் - இறப்பதற்கு முன்னரே இயன்றளவு நன்மை செய்து கொள்ளுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்குபவனாக இருக்கின்றான்.(2:110).

உண்மை அவ்வாரன்று எவர் அல்லாஹ்வுக்காக நன்மை செய்து தன்னை (முற்றிலும்) அல்லாஹ்வுக்கு அரம்பணம் செய்து விடுகிறாரோ அவருக்கே அவர் செய்யும் நன்மையின் கூலி அவருடைய இறைவனிடம் உண்டு. அன்றி இந்தகையவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார் ( 2:112).

**மறுமை நாளில்...**

அன்றி, ஒரு நாளைப் பற்றியும் பயந்து கொள்ளுங்கள். அந்நாளில் ஓர் ஆத்மா மற்றொரு ஆத்மாவுக்கு எவ்வித பயனுமளிக்காது. அதனிடமிருந்து யாதொரு பரிகாரமும் ஏற்கப்படமாட்டாது. எவ்வித பரிந்துரையும் அதற்கு பயன்தராது. அன்றி அவர்கள் (யாராலும் எவ்வித) உதவியும் செய்யப்பட மாட்டார்கள். (2.123)

**தொகுப்பு: இப்னு தௌபீக் ஆலிம்**

# எலுவன்குலம் மறிச்சுக்கட்டி பாதை விரைவில் மக்கள் பாவனைக்கு

## அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உறுதி



எலுவன்குலம் ஊடாக மறிச்சுக்கட்டி சிலாவத்துறை வரை நீலும் பாதையை மிக விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்கவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ உறுதியளித்தார்.

இப் பாதையை மீளத் திறப்பது தொடர்பான இறுதிக் கட்ட பேச்சுவார்த்தை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போதே அங்கு சென்றிருந்த தூதுக்குழுவிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இச் சந்திப்பில் அமைச்சரின் முஸ்லிம் விவகாரத்துக்கான இணைப்பாளரும் வவுனியா சிறைச்சாலை மேற்பார்வை குழுவின் தலைவருமான நிப்ராஸ் முஹம்மத், டாக்டர் தஸ்லீம், கணக்காளர் தன்ஸீல்,பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி தமீம், சட்டத்தரணி அஸ்லம்,நீதியமைச்சு அதிகாரிகளான எல்விடிகல, சட்டத்தரணி பந்துல இச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.








நாச்சியாதீவு
பர்வீன்




# கன்னட சிறுகதைகள் வாசிப்பு அனுபவம்

– வி.எம்.ரமேஸ் –

வாசக நண்பர்களே நம்பிக்கையான வாசிப்பு அனுபவம். தற்காலத்தில் இயக்கத்தில் இருக்கக்கூடிய கன்னட எழுத்தாளர்கள் பன்னிருவரின் சிறந்த 12 சிறுகதைகளை தெரிந்து தரமான அனுபவமாக தமிழுக்கு எதிர் வெளியீடாக கே.நல்லதம்பி கொடுத்திருக்கிறார்.

ஒவ்வொரு சிறுகதைக்குள்ளும் ஒருவரின் வாழ்க்கை யதார்த்தம் இருக்கிறது எத்தனை பேர் வாசித்தாலும் அத்தனை பேருக்குமான திருப்தியை தரக்கூடிய தொகுப்பு. அவ்வளவு தரமான தெரிவுகளாய் ஒவ்வொரு கதைகளும் இருக்கிறது.

இந்த கதைகளுக்குள் முனைவர் ராமசந்திர தேவர் எழுதிய மூக்கன் சிறுகதை அபாரமானது இன்னும் கூட கதை ஏற்படுத்திய உள்ளுணர்வுகளில் இருந்து வெளிவர முடியாதுள்ளது. இந்த கதை பற்றி பேசா விட்டால் எனக்கு நான் செய்யும் துரோகமாகி விடும் அவ்வளவு ஆத்மார்த்த மானது கதை.அந்த கதை பற்றி பேசுவதே இந்த பதிவின் நோக்கமும் கூட.

ஒரு தம்பதியினருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறக்கிறது.பிறந்த குழந்தை இயல்பாக வளர்கிறது ஆனாலும் அதன் வளர்ச்சியில் கருமம் சூழ்கிறது. குழந்தைக்கு மூன்று வயது நெருங்கும் போது அவனுடைய மூக்கு வளர ஆரம்பிக்கின்றது ஆரம்பத்தில் ஒரு பொருட்டே இல்லாத வளர்ச்சியாக இருந்தாலும் குழந்தைக்கு நான்கு, ஐந்து வயதுகளில் அதன் வளர்ச்சி அபரிமிதமாக அதிகரிக்கின்றது.

அதன் பின்னர் அவன் முகம் கொடுக்கும் வேதனை, அவமானம் ஒரு வாசகனை மன உளைச்சல் அடையச் செய்யும் சந்தர்ப்பங்கள், அழவைக்கும் தருணங்கள். அவமானம் தாங்கமுடியாமல் இறுதியில் தனது இருபத்தோராம் வயதில் தற்கொலை செய்து கொள்கிறான்.

இந்த கதையில் உச்ச உணர்வு நிலையில் மனம் தளரும் தருணமொன்று வரும் தருணத்தை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இவனுக்கு மூக்கு வளர்ந்து கொண்டே போகிறது எத்தனையோ மருத்துவங்கள் செய்து ஆனதொன்றுமில்லை என்ற நிலையில் அவனையும் அவன் பெற்றோர்களையும் ஊரோ காட்சிபொருளாக்குகிறது.

அம்மாவை விட அப்பா நிறைய சகித்து கொள்கிறார் தன் வாரிசுக்காக. ஒரு சந்தர்ப்பத்தில் அப்பா செய்து வந்த வியாபாரம் நொடிக்கிறது. இனி வேலை தேட வெளியில் அன்றாடம் இருவரும் போகவேண்டிய நிலையில் பையனை பார்த்துக்கொள்ள ஒரு வேலைக்காரியை குறைந்த சம்பளத்திற்கு வேலைக்கு அமர்த்தி விட்டு போகிறார்கள்.

வேலைக்கு போனவர்கள் காலையில் சென்றால் இரவாகும் வர. இதற்கிடையில் மூக்கனை பார்க்க சிலர் வர ஆரம்பிக்கிறார்கள் வேலைக்காரி முதலில் தடுத்தாலும் சில்லறைக்காக சிலரை அனுமதிக்கிறாள் சிலர் சிலகாலத்தில் பலராகினர். பெற்றோர் அறியாமல் அவன் அறைக்கு அனுமதிக்க படுபவர்கள் மூக்கை பிடிப்பது அதை கிள்ளி விளையாடுவதுமாக நாட்கள் கழிகிறது.

ஒரு சமயத்தில் தந்தை வேலை முடிந்து பகல் பொழுதொன்றில் வீடு வர வீட்டு வாசலில் மக்கள் கூட்டம் அலைமோத, ஆச்சரியப்பட்டவர் வேலைக்காரியை விசாரிக்க அவள் தனக்கு கொடுக்கும் சம்பளம் போதாமல் இருப்பதால் இப்படி சில்லறைக்காக சிலரை பார்வையாளராக பார்க்க அனுமதி கொடுத்தாக சொல்லி விடுகிறாள்.

ஆத்திரமடைந்தவர் அவளை துரத்திவிடுகிறார். இந்த சம்பவத்திற்கு பிறகு வீட்டில் தன் பெற்றோருக்குள் சலசலப்பு ஏற்படுவதை உணர்கிறான் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருக்கும் தந்தை ஒரு நாள் வேதனையான தருணத்தை வாசகனுக்கு கொடுக்கும் உச்சநிலை இது நீங்களே வாசித்து பாருங்கள்

”அதற்கு மறுநாள் வீட்டுக்கு சுண்ணாம்பு அடிக்க ஆட்கள் வந்திருந்தார்கள். சீருடை அணிந்த ஒரு ஆளும்

வந்தார்.கூடவே புதிதாக ஒரு பெயர்ப் பலகையும், அந்த பலகையில்:

நீள மூக்குள்ள பேசும் அதிசய விலங்கு பார்வை நேரம் காலை 7 மணியிலிருந்து இரவு 8 மணி வரை.

இதை பார்த்த உடனே அவன் சுக்குநூறாக உடைந்து போவான் அவ்வளவு அற்புதமான சிறுகதை தோழர்களே கட்டாயம் வாசிக்க வேண்டிய கதை.

தொடர்ந்து தொகுப்பில் இருக்கும் ஒவ்வொரு கதைகளுக்குள்ளும் மேற்சொன்ன முறையிலான அடக்க முடியாத இதம் இருக்கிறது தொழில்,அதீத காமம், நிர்வாணம், பாம்பாட்டி போன்ற கதைகளின் உள்ளடக்கம் இதுவரை சொல்லாத சுயம் கொண்டது. மறந்து விட முடியாத வாசிப்பு அனுபவம்.

## அழகென்பது...



உன் முகத்தின்
வெண்மையல்ல
உள்ளத்தின் மென்மை

நீ அணிந்திருக்கும்
நகையல்ல
உன் புன்னகை

உன் ஆடைகளின்
சேர்த்தியல்ல
ஆன்மாவின் நேர்த்தி

உன் முகத்தில் பூசும்
பூச்சல்ல
முகமலர்ந்த பேச்சு..

உன் உதட்டில் தடவும்
சாயமல்ல
உன்னிடமுள்ள நியாயம்..

உன் அலங்காரத்தின்
செல்வாக்கல்ல
நீ காப்பாற்றும் சொல் வாக்கு..

– ஹுமைரா அல் அமீன் –

# சவூதி சுற்றுச் சூழல் மாநாடு



சவூதி அரேபிய இராச்சியம் , ஜூன் 5, 2024 புதன்கிழமை, அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தினை, “நமது பூமி, நமது எதிர்காலம்” எனும் கருப்பொருளின் கீழ் தலைநகர் ரியாத்தில் உள்ள கிங் அப்துல் அஸீஸ் சர்வதேச மாநாட்டு மையத்தில் கொண்டாடியது. 150 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பல அதிகாரிகள், நிபுணர்கள், இன்னும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இதில் பங்கேற்றனர். உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான ஆர்வமுள்ள மக்கள் உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வுகளை முன்னெடுத்து வந்தனர். இது சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கான சர்வதேச ஈடுபாட்டை விளக்கி நிற்கிறது.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்துடன் இணைந்து, உலக சுற்றுச்சூழல் தின நிகழ்வுகளை சவூதி அரேபியா நடாத்தியது. இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல் ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான முகமது பின் சல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல் ஸஊத், அவர்களது தலைமையில் நடாத்தப்பட்ட இந்நிகழ்வானது, அனைத்து மனிதகுலத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் பங்களிப்பு செய்வதில் அதன் உயர் இலக்குகளோடு இணங்கிச்செல்லும் “இராச்சியத்தின் விஷன் 2030” என்ற குறிக்கோளைத் தாங்கி நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இயற்கை, மனிதர்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதிலும் உலகளாவிய மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மாபெரும் முன்னேற்பாட்டை சவூதி அரேபிய இராச்சியம் தொடங்கியுள்ளது. அவையாவன “சவூதி அரேபியாவின் பசுமை” மற்றும் “மத்திய கிழக்கு பசுமை” முன்னேற்பாடுகள் என்பனவாகும். சவூதி அரேபிய இராச்சியத்தில் 10 பில்லியன் மரங்கள் உள்ளடங்கலாக, மத்திய கிழக்கில் (50) பில்லியன் மரங்களை நடுவது இம்முயற்சிகளின் பிரதானமான நோக்கமாகும். இது உலகளாவிய காடு வளர்ப்பின் 5 சதவீதத்துக்கு சமமான இலக்காகும். இம்முயற்சிகள் உலகளாவிய சுற்றுச்சூழல் இலக்குகளில் பெரும்பகுதியை அடைவதற்கு பங்களிப்புச்செய்யும்.

இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தின கொண்டாட்டங்கள், நிலச் சீரழிவு, பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை நிவர்த்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தின. இந் நிகழ்வுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தியமை சிறப்புக்குரியது. இயற்கைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கும் கொள்கைகள் மற்றும் செயல்களில் உலகளாவிய முதலீடுகளின் அவசரத் தேவைப்பாட்டை இந்த நிகழ்வுகள் எடுத்து சொல்லியது. நிலையான வளர்ச்சியின் மூலம் இலக்குகளை அடைவதற்காக, உலகளாவிய சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும் மறுசீரமைக்கவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சவூதி அரேபிய இராச்சியத்தின் முயற்சிகள் பற்றி அனைவரும் அறிந்துள்ளனர். 2020ஆம் ஆண்டு புு20 உச்சிமாநாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோது, உலகளாவிய நிலத்துக்கான முன்னேற்பாடுகளை தொடங்குவதில் இராச்சியம் முக்கிய பங்காற்றியது. இதன் நோக்கம் உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை ஊக்குவிப்பதாகும். மேலும், இராச்சியம், ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து 2024 டிசம்பர் 2 முதல் 13 வரை ரியாத்தில் ஊழூ 16 இன் பதினாறாவது அமர்வை நடாத்த ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த அமர்வு நிலப் பாதுகாப்பு மற்றும் பாலைவனமாதல், வறட்சி போன்ற பேரழிவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் மாபெரும் மாநாடாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியாவில், உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடியமையானது, பசுமை சகாப்தத்தை முன்னெடுத்துச் செல்வதில் இராட்சியத்தின் முன்னோடியான பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது. இதற்காக, சவூதி அரேபியா சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தாவரங்களின் நிலைத்தன்மை மேம்பாடு, பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல முயற்சிகளைத் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவை உள்ளூர் மற்றும் பிராந்திய சமூகங்களில் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன.

# மூன்றாம் முறையாக நரேந்திர மோடியின் வெற்றியும், இந்திய ஜனநாயக அச்சுறுத்தல்களும்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



18 இந்திய நாடாளுமன்ற தேர்தலில் யாருக்கும் தனி மெஜாரிட்டி (234) கிடைக்காத நிலை காணப்படுகிறது. ஆனாலும், மூன்றாவது முறையாக இந்திய பிரதமராக நரேந்திர மோடி தபதவிலைமையிலான மத்திய அரசு பதவி ஏற்கும் நிலை உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

543 ஆசனங்களக்கான இந்திய நாடாளுமன்ற பிஜேபியின் உறுப்பினர் தொகுதிக்கான தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதன் தோழமை கட்சிகள் 293 இடங்களில் வெற்றி பெற்றது. அதே நேரத்தில் காங்கிரஸ் மற்றும் அதன் தோழமை கட்சிகளை உள்ளடக்கிய I .N. D. A. கூட்டணி கட்சிகள் 234 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் அவையில் தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது இந்திய நாடாளுமன்றத்தில் ஒரு கட்சியோ அல்லது தனி நபரோ பதவி ஏற்க வேண்டும் என்றால் 543 தொகுதியில் 272 ஆசனங்களை வெல்லும் கட்சி தலைவரே பிரதம வேட்பாளராக பதவி ஏற்க முடியும் என்பதே இந்திய அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையிலான தகுதியாக இருக்கிறது.

இச்சை படி ஆட்சி செய்ய முடியாது என்று குறிப்பிட் டுள்ளது.

அதுதவிர, இந்தத் தேர்தல் முடிவுகள் பாஜகவின் தேர்தல் கொள்கை மீதும் கேள்வி களை எழுப்புகிறது. பாஜக மற்றும் நரேந்திர மோதியின் பிரசாரம் வகுப்புவாத பிரிவினையில் அதிக கவனம் செலுத்தியது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்திய ஏற்படவில்லை என்பது தான் உண்மையாகும்.

இதற்கு உதாரணமாக தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் 40ஃ40 தொகுதிகளை கைப்பற்றி தமிழர்கள் எப்போதும் மதவாத அரசியலை விரும்ப மாட்டார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை நிருபித்து இருப்பதே மிக முக்கியமான செய்தியாக உள்ளது. பாரதிய ஜனதா கட்சியின் தோல்விக்கு மிக முக்கியமான மாநிலமாக தமிழகம் தொடர்ந்து இருந்து வருகிறது. பிஜேபி யின் தேசிய தலைமை எவ்வளவு முயன்றும் தமிழ் நாட்டில் அவர்கள் கால்பதிக்க வழியே இல்லை என்கிற நிலை தான் என்று கூறிய போது பாஜக அதனை மறுத்து மிக கடுமையாக அறிக்கை வெளியிட்டது.

இந்த நிலையில் கடும் போக்கு வாதியான இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமீத் ஷா ஆகியோர் எங்கள் உயிர் உள்ள வரை முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு தரப்போவதில்லை என்று வெறுப்பை விதைக்கும் விதமாக பொது மேடைகளில் முழங்கினார்கள்.

இந் நிலையில் பாஜக அரசு அதாவது மோடி அரசு ஆட்சியில் நிலைபெற வேண்டும் என்றால் தெலுங்கு தேசம் கட்சியின் ஆதரவுடன் தான் ஆட்சி அமைக்க முடியும். தற்போதைய நிலையில் தெலுங்கு தேசம் கட்சி இந்தியாவில் மோடி தலைமையிலான அரசு கொண்டு வர முயற்சி செய்யும் எல்லா மோசமான சட்டங்களையும் உடனடியாக தடுத்து நிறுத்தி விடும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதே போல் பீஹார் மாநிலத்தின் சோஷலிச கட்சியான நிதீஷ் குமாரும் தீவிர இந்துத்துவா சக்திகளின் அதிகாரத்தை வெறுக்கும் நிலையில் இந்த இரு கட்சிகளையும் மீறி மோடி அரசு எந்தவொரு சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாதது இந்திய ஜனநாயக மாண்புகளுக்கு அரணாக அமைந்துள்ளது.

என்கிற கேள்விக்கு தற்போது யாரிடமும் துல்லியமான பதில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. அதேநேரத்தில் இந்து தேசியவாத அமைப்பான ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை பொறுப்பில் இருக்கும் தலைவர்கள் மோடி மற்றும் அவரது கூட்டாளிகளின் அதிகாரத்தை மட்டுப்படுத்த விரும்புகிறார்கள். ஏனெனில், சமீபத்திய நாட்களில் பாஜக ஜனதாவின் தேசிய தலைமை ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமையை உதாசீனம் செய்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. உண்மையில் மோடியின் ஆலோசனை படியே அவர்கள் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஆர் எஸ் எஸ் அமைப்பு நம்புகிறது . இது நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு புதிய ஆட்சி அமைக்கும் பட்சத்தில் சில பல சிக்கல்களைக் ஏற்படுத்தும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.இருந்த போதிலும் கருத்து வேறுபாடுகள் களையப்பட்டு சுமூகமான தீர்வை எட்டும் நிலையில் மோடி அரசு கடந்த காலங்களில் நடந்து வந்தது போன்ற சுயாதீன நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்பு இல்லை .

பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் முஸ்லிம் விரோதமான

இதற்கிடையே முப்பது ஆண்டுக்கால ராமர் கோவில் வாக்குறுதியை பாஜக நிறைவேற்றியது. ஆனால் தேர்தலில் அது எந்தப் பலனையும் காட்டவில்லை.

2014இல் ராமர் கோயில் கட்டப்பட்டுள்ள உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் உள்ள 80 இடங்களில் 71 இடங்களிலும், 2019இல் 62 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்த பாஜக, இம்முறை 33 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது,” என்று டைம் நாளிதழ் எழுதியுள்ளது. இதன் மூலம் தான் பிஜேபி தனித்து பெரும்பான்மை பெறுவது தடுக்கப்பட்டுள்ளது.

மோடி ஆட்சி அமைப்பார், ஆனால் அவரது அரசாங்கம் அவரது கூட்டணிக் கட்சிகளின் கைகளில் இருக்கும்” என்று கூறுகிறது அல்ஜசீரா.அல் ஜசீரா மோதியின் பிம்பம் சிதைந்துள்ளது எனக் குறிப்பிட்டு எழுதியுள்ளது.

அமெரிக்க நாளிதழான வாஷிங்டன் போஸ்ட் நரேந்திர மோடியின் தலைமையை இந்திய வாக்காளர்கள் பலர் நிராகரித்துள்ளனர். இது எதிர்பாராத திருப்பம். இந்த முடிவு பல ஆண்டுகளாக வலிமையான தலைவராக முன்னிறுத்தப்பட்ட மோதியின் பிம்பத்தை உடைத்துவிட்டது, ஹஅவர் வெல்ல முடியாதவர்’ என்னும் பிம்பத்தையும் அழித்துவிட்டது என்று கூறி உள்ளது.

அமெரிக்காவின் பிரபல பத்திரிக்கையான ஹடைம்’ தனது செய்தி அறிக்கையில், கருத்துக் கணிப்புகளும், அரசியல் விமர்சகர்களும் மோதியின் வெற்றியைக் கணிப்பதில் கொஞ்சம் அவசரம் காட்டியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் நாளிதழில், “நரேந்திர மோதியின் கடந்த 10 ஆண்டு ஆட்சிக் காலத்தில், ஆச்சரியம் நிறைந்த பல்வேறு பக்கங்கள் உண்டு. அதே நேரத்தில் மோடி இனி தனது மன முஸ்லிம்களை அவர்களது வாழ்க்கை முறையை கூட மிகவும் கடுமையாக விமர்சனம் செய்தார்.இது சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன அதிர்வலைகளை ஏற்படுத்திய போதும் மோடி அதனை குறித்து கொஞ்சம் கூட கவலைபடாமல் பிரச்சாரத்தை முழுமையான முஸ்லிம் வெறுப்பாகவே மாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு வளங்களை வழங்குவார்கள் என்று பிரசாரத்தில் மோடி வெளிப்படையாக கூறினார். ஆனால் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் பிரசாரம் மோடி அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் அதன் பொருளாதார தோல்வியை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக பாரதிய ஜனதா கட்சியின் தனிப் பெரும்பான்மை தடுக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

உண்மையில் இந்த தேர்தல் முடிவுகள் மூலம் இந்தியாவில் இந்துத்துவா கருத்தியல் சித்தாந்தம் இனி எப்போதும் நிலையான தொடர் நடவடிக்கையாக இருக்க வாய்ப்பே இல்லை. வட இந்தியாவில் உள்ள சாதாரண இந்து மக்களை கவரும் வகையில் தான் இந்து, முஸ்லிம், பாகிஸ்தான், ஜிகாத், ஷரியத் சட்டம் என்று மிக மோசமான பிரச்சாரம் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நிலையில் கூட சாதாரண இந்து வாக்காளர்களை அது எந்தவொரு நிலையிலும் கவரவில்லை என்பதை தான் இந்திய தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் கூறி உள்ளது என்பதே யதார்த்தமான உண்மை.

இந்தியாவில் வாழும் சமூகங்கள் வட இந்திய மற்றும் தென்னிந்திய சமூகம் என்கிற அடிப்படையில் தான் இயங்குகிறது. தென்னிந்தியாவில் எப்போதும் பெரிய அளவில் ஆன மதவாத அரசியல் அமைப்புக்கள் வெற்றி பெற சாத்தியக்கூறு இதுவரை தற்போதைய முடிவுகள் மூலம் நாம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இந்தியாவின் வளர்ச்சி, சுதந்திரம், ஜனநாயக மாண்புகள் நிலைப் பெற இந்திய முஸ்லிம்கள் பங்கு அளப்பரியது. ஆனால் மோடி அரசு முஸ்லிம்களை அந்நியப்படுத்த எடுத்த எல்லா முயற்சிகளையும் இந்திய பொது சமூகம் தடுத்து நிறுத்தி இருப்பது பதட்டத்தில் இருந்த முஸ்லிம் சமூகத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதேநேரத்தில்,மோடி தலைமையிலான இந்துத்துவா ஆட்சி இந்தியாவை முழுமையாக இந்து தேசமாக மாற்ற முடியும் என்று நம்பிக்கையுடன் அதிகார குவிப்பை மத்தியில் மையப்படுத்தி ஆட்சி செய்த நிலையில் தற்போதைய சூழலில் இது முழுமையாக மட்டுப்படுத்தப்பட்டது. நிச்சயமாக மீண்டும் வலுவான நிலையில் தனி மெஜாரிட்டி பெற்று மோடி ஆட்சிக்கு வந்து இருந்தால் இந்தியாவில் ஏராளமான குழப்பங்கள் ஏற்பட்டு இருக்கும் என்பதே உண்மையாகும். ஒரு வேளை மோடி அரசு 300 க்கு ஆசனங்களை தனித்து வெற்றி பெற்று இருந்தால் அது இந்திய இயற்கை தன்மையை நிச்சயமாக அழித்து விடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இன்று வரை மோடி தலைமையிலான பாஜக அரசு மெஜாரிட்டி கிடைக்காத நிலையில் ஆட்சியமைக்க உதவியாக மாநில கட்சிகளை நாடியுள்ளது. அதிலும் இந்தியாவில் உள்ள தென்மாநிலங்களில் ஒன்றான ஆந்திரப் பிரதேசம் மாநிலத்தில் தெலுங்கு தேசம் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. அப்போது தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரான சந்திரபாபு நாயுடு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு 4 வீதமான இட ஒதுக்கீடுகளை கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் தருவோம்

இத்தனை களோபரங்கள் நடந்த பிறகு நரேந்திர மோடி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று பேசியதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதுவரையில் இருந்த ஜனநாயக மாண்புகள் அடிப்படை, தார்மீக மரபுகள் அதனையும் தாண்டி மக்களை காக்க வேண்டிய இடத்தில் இருக்கும் நாட்டின் தலைமை பொறுப்பில் இருக்கும் பிரதமர் ஒருவரே தனது குடிமக்களுக்கு எதிராக பேசியது மனித நேயம் பாவனைக்கு முற்றிலும் எதிரான மனநிலை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே கிடையாது. தனது கட்சி பலம் குறைந்த நிலையில் மாற்று கட்சிகளுடன் இணைந்து தான் அரசாங்கத்தை நிர்வாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் தான் அவர் இது போன்ற வார்த்தைகளை பேசுவதாக எதிர் கட்சிகள் மிக கடுமையாக குறை கூறி உள்ளது.

தற்போதைய நிலையில் இந்தியாவில் அரசியல் ஸ்ரத்தன்மை அற்ற ஒரு சூழல் நிலவுகிறது. இந்தியாவில் பங்கு சந்தைகள் ஒரே நாளில் அதாவது பிஜேபி அரசு தனி மெஜாரிட்டி கிடைக்காத நிலையில் ஒரே நாளில் 30 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது அமெரிக்கா டாலர் மதிப்பில் இது 38 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள தொகை என்பது தான் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ள செய்தியாக உள்ளது.

அதே சமயம் மோடி தலைமையிலான மத்திய அரசு ஆட்சிக்கு ஆதரவு தரும் கூட்டணி கட்சிகளான தெலுங்கு தேசம் கட்சியும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியும் பல்வேறு நிபந்தனைகளை விதித்து வரும் நிலையில் இது வரை தனித்து ஆட்சி கட்டிலில் அமர்ந்து தனி ஆவர்த்தனம் செய்து வந்த நரேந்திர மோடி இதனை எப்படி கையாளப் போகிறார்

சட்டங்களை நிறைவேற்ற ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது இந்தியாவின் ஜனநாயக வாதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு மாதங்கள் தொடர் பிரச்சாரத்தில் முஸ்லிம்கள் வெறுப்பு மிகவும் உச்சகட்ட நிலையை அடைந்தது. பொது மக்களை காக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் நரேந்திர மோடியே முன்னின்று இது போன்ற மாபெரும் தவறை வாக்கு அரசியல் இலாப நோக்கத்திற்காக செய்து முடித்தார்.

அதனைத் தொடர்ந்து உச்சபட்சமாக உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் இராமர் கோயில் கட்டி பிராதான பிரதிஷ்டை மோடி தலைமையிலான அரசு நடத்தி முடித்த நிலையில் இது தேர்தலில் தமக்கு மிகப் பெரிய அளவில் வெற்றியை ஈட்டித் தரும் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றது.

அதேபோல் முஸ்லிம் விரோத சட்டங்களான ஊயுயு, சேஊஉ , சே .... கொடூரமான ருகுயு சட்டங்கள் கூட இனி பரிசீலனை செய்யப்படும் என்று நம்புவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளது.

அதேநேரத்தில் எதிர் கட்சிகள் நாடாளுமன்றத்தில் 234 இடங்களில் வெற்றி பெற்றதும், இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் வெற்றி பெற்றதும் பிஜேபி யின் கடும் போக்குவாத வங்குரோத்து நடவடிக்கைகளை முழுமையாக தடுத்து நிறுத்தும் வகையில் அமைந்துள்ளது இந்திய ஜனநாயகத்திற்கு முழுமையான வெற்றி என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த பன்முகத் தன்மை கொண்ட ஜனநாயகம் தழைத்து ஒங்கும் நிலையில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக சக்தியாக இந்தியா உலகிற்கு எல்லா நிலைகளிலும் முதன்மையான நிலை

# நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக சர்வமத தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்





நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவினால் சர்வமத தலைவர்களான வன. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு அண்மையில் (07) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனக்கடிதத்தை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வழங்கிவைத்தார்.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வழுப்படுத்தல், சகல இனங்களுக்கிடையிலும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றினை நோக்கி அனைத்து இனங்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் சர்வ மத நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தலுக்காக இவ்வமைச்சிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஒருங்கிணைத்தல் ஆகியன இப்பதவியின் பிரதான இலக்கு மற்றும் செயற்பணிகளாகும் என்றும் நியமனக் கடித்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே தெரிவு செய்யப்பட்ட சர்வமத தலைவர்கள் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் இன ஒற்றுமைக்காக பல்வேறு செயல்பாடுகளை 20 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சையில் கல்லொழுவை அல் - அமானில் 11 மாணவிகள் தேர்வு

(ஐ.ஏ. காதிர் கான்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, மினுவாங்கொடை கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11 மாணவிகள் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

இதில், எம்.ஜே.எப். அஸ்மா, ஜே.எஸ்.எப். ஷரபா, எம்.எம்.எப். இல்மா, எம்.எப். ஆதிகா, எம்.ஆர். எப். நபீலா, எம்.ஆர்.எப். நபீஹா, எம். என்.எப். ஆயிஷா, எம்.என்.எப். திக்ரா ஆகிய மாணவிகள் கலைப் பிரிவிலும், எம்.ஆர்.எப். ருகையா, எம்.ஆர்.எப். அப்ரா, எம்.என்.எப். பௌஸா ஆகிய மாணவிகள் வர்த்தகப் பிரிவிலும் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று, வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம் தெரிவித்துள்ளார்.

# கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி





(இக்பால் அலி)

கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கண்டி போகம்பர விளையாட்டு மைதானத்தில் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேசிய கெடட் குழுவின் முதல் தர அலுவலக உத்தியோகத்தர் லெப்டினல் கேணல் எம். டப்லியூ, டி. எம். குமாரி பண்டார கலந்து கொண்டதுடன், கண்டி கல்வி வலய தமிழ் மொழி பிரிவுக்கான உதவிப் பணிப்பாளர் நூருல் அமீன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், கண்டி முன்னாள் மாநகர சபை உறுப்பினர் மாத்தலி மரைக்கார், வெளிவிகார அமைச்சரின் கண்டி மாவட்ட இணைப்பாளர் வஸீர் முக்தார். ரிஸ்வி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஆயிஷா, பாத்திமா, ஆமீனா, கதீஜா ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டில் கதீஜா இல்லம் 427 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை சீனன்கோட்டை பகுதியில் இருந்து சுமார் 200க்கும் அதிகமானோர்கள் மக்காவுக்கு பயணம்

(பீ.எம்.முக்தார்)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இவ்வருடம் (2024) பேருவளை சீனன்கோட்டை பகுதியில் இருந்து சுமார் 200க்கும் அதிகமானோர்கள் மக்காவுக்கு செல்கின்றனர்.

இவ்வாறு புனித ஹஜ் கடமையை மேற்கொள்ள செல்லும் முதல் கட்ட ஹாஜிகளை வழியனுப்பும் நிகழ்வு பாஸியா பெரிய பள்ளிவாசலில் அண்மையில் (2) இடம்பெற்றது.

ஹஜ் கடமையை மேற்கொள்வோர் பல முகவர் நிலையங்களினூடாக கட்டம் கட்டமாக செல்லவுள்ளனர். கடைசி குழுவினர் நேற்று (9 ) பயணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனன் கோட்டையில் இருந்து ஒவ்வொரு வருடமும் அதிகமானவர்கள் புனித ஹஜ் கடமையை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.






கொழும்பு சின்னமன் லேக் ஹோட்டலில் இடம்பெற்ற இலங்கை இளம் தொழில்முனைவோர் பேரவையின் 2024 ஜுன் மகா சபை கூட்டம் அண்மையில் (06) இடம்பெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க கலந்துகொண்டார்.

# பிறை தென்பட்டதால் 17ல் ஹஜ் பெருநாள்




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

துல்ஹஜ் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு 7ஆம் திகதி கொழும்பு பெரிய பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது நாட்டின் பல பாகங்களிலும் துல் ஹஜ் மாதத்திற்கான தலைப் பிறை தென்பட்டதால் இன்று மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து துல் ஹஜ் மாதம் ஆரம்பமாகின்றது என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழு பிரதித் தலைவர் மௌலவி அஷ் ஷெய்க் ஏ.எல்.எம் றிலா அவர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

17ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், வளிமண்டளவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்களின் பிரதிநிதிகள் மேமன் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒலுவில் அல்-ஹம்றா தேசிய பாடசாலை க.பொ.த உயர் தர பரீட்சைப் பெறுபேற்றில் சாதனை

(இஸட்.ஏ.றஹ்மான்)

இம்முறை நடந்து முடிந்த க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒலுவில் அல்- ஹம்றா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவர்கள் மீண்டும் சாதனை படைத்துள்ளனர். அந்த வகையில் மருத்துவப் பிரிவுக்கு 03 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவுக்கு 10 மாணவர்களும், பொறியியல் பிரிவுக்கு 03 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானப் பிரிவுக்கு 10 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதுடன் முகாமைதத்துவ பீடத்திற்கு 06 மாணவர்களும், கலைத்துறைக்கு 10 மாணவர்களுமாக மொத்தம் இம்முறை 42 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இம் மாணவர்களுக்கும் , அவர்களுக்கு பல்வேறு வழிகாட்டல்களை வழங்கிய பாடசாலையின் அதிபர் அஷ்ஷேஹ் ருமு. அப்துர் ரஹீமுக்கும், திறமையாக கற்பித்த ஆசான்களுக்கும் , பெற்றோர்களுக்கும் ஊர் மக்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

# தம்பதெனிய அல் ஹிஜ்ராவிலிருந்து ஐந்து பேர் பல்கலைக்கு தேர்வு



GIRI AL HIJRA MAHA VIDYALAYA
DAMBADENIYA
G.C.E.A/L RESULT_2023

| NO | NAME | I.C | TAMIL | GEOGRAPHY | ENGLISH |
|---|---|---|---|---|---|
| 1 | S.F.RUSDHA | A | A | A | A |
| 2 | M.F.LEENA JASMIN | A | B | B | A |
| 3 | S.A.B.B.B.SUMANASEKARA | B | B | B | A |
| 4 | T.F.F.RAMEESA | A | C | C | C |
| 5 | M.S.F.NIFLA | S | C | C | C |

( ஐ.ஏ. காதிர் கான் )

வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பதெனிய நகரில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிரிஉல்ல தம்பதெனிய அல் ஹிஜ்ரா மகா வித்தியாலயம், அதன் 75 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், இவ்வருடம் முதன் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளில் ஐந்து பேர் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில் எஸ்.எப். ருஷ்தா (3ஏ), எம்.எப். லீனா ஜெஸ்மின் (ஏ 2பீ), எஸ்.ஏ.பீ.பீ.பீ. சுமணசேகர (3பீ) ஆகியோர் பல்கலைக்கழகங்களுக்கும், ரீ.எப்.எப். ரமீஸா (ஏ 2சீ), எம்.எஸ். எப். நிப்லா (2சீ எஸ்) ஆகிய மாணவிகள் கல்விக் கல்லூரிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வித்தியாலய ஆசிரியர்கள், வித்தியாலய சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே வரலாற்றின் முதல் வெற்றியாகும் என, அதிபர் சிபானா சனூன் பாராட்டிப் பேசினார்.

## மனநலமும் ஆலோசனையும் 34



# மனதளவில் வலுவடைதல்

எமது அன்றாட வாழ்வில் நாம் மனதளவில் வலுவாக இருப்பது மிகவும் முக்கியம் என்பதை நினைவில் கொண்டு செயலாற்ற தவறக் கூடாது. நாம் செய்யும் எந்த நல்ல செயலிலும் சந்தேகமோ, அவநம்பிக்கையோ இல்லாமல் தைரியமாக செயற்படும் தன்மை இருப்பது முக்கியமாகும்.

மன வலு அல்லது மன தைரியம் இல்லாமல் செய்யும் எந்த செயலும் எதிர்பார்க்கும் முடிவை தராது. நாம் அன்றாடம் முகம் கொடுக்கும் விடயங்கள் ஏராளம். அவை இலகுவானவையாகவும் இருக்கலாம். சவால்களாகவும் அமையலாம்.

வாழ்க்கை பாதையில் பயணிக்கும்போது எல்லாமே எமக்கு சுகமாக கிடைப்பதில்லை. அப்படி எதிர்பார்க்கவும் கூடாது. எதையும் சந்திக்கும் மன பலமும் அதேநேரம் அவசரமும் ஆவேசமும் அடையாமல் செயற்பட மனதை தயார்படுத்திக் கொள்வதும் மிகவும் அவசியமாகும்.

- கடினமான சூழ்நிலைகளில் இருந்து மீள
- உணர்ச்சிவசப்படாமல் செயற்பட
- அன்றாட மன அழுத்தத்தை முறையாக கையாள
- நல்ல முடிவுகளை எடுக்க
- நேர்மறையாக செயற்பாட
- எமது இலக்குகளை அடைய
- நல்ல உறவுகளைப் அமைக்க
- நம்மீது நம்பிக்கையை உருவாக்க
- புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப செயலாற்ற
- வாழ்க்கையில் நல்லுணர்வைப் பெற

என்று பல நல்ல குணங்களை பெற்றுக்கொள்ள மன தைரியம் பெரும் தாக்கம் செலுத்துகிறது.

அதனால்...

- எங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் பற்றி நாம் மிகவும் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்போம்...
- எமது இலக்குகளை தெளிவானவையாக அமைத்துக் கொள்வோம்....
- எங்கள் கட்டுப்பாட்டில் எவற்றை வைக்க முடியுமோ அவற்றின் மீது கவனம் செலுத்துவோம்....
- மன அழுத்தத்தைக் கையாள ஆரோக்கியமான வழிகளைக் கண்டறிவோம்....
- எந்த நேரத்திலும் சுய ஒழுக்கத்தை கடைப்பிடிப்போம்.....
- பயனுள்ள நுட்பங்களை தேடித் தெரிந்து கொள்வோம்......
- மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும் நல்ல செயல்களில் ஈடுபடுவோம்.....
- சவால்களை எதிர்கொள்ள எப்போதும் தயாராக இருப்போம்.....
- உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவோம்.....

மனதளவில் நிம்மதியாகவும் தைரியமாகவும் சுதந்திரமாகவும் இருக்க இவையெல்லாம் எமக்கு பேருதவியாக இருக்கும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# காதர் மஸ்தான் நிதியொதுக்கீட்டில் உழுந்தடைப்பு உள்ளக வீதி அபிவிருத்தி



கிரமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டச்சி கிராம அலுவலக பிரிவின் உழுந்தடைப்பு உள்ளக வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறது.

1.4 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறது.

நீண்டகாலமாக இவ்வழியால் பயணம் செய்யும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மிகவும் சிறமத்திற்கு மத்தியில் பயணித்து வந்தனர்.

குறித்த வேலைத்திட்டம் பாசித்தண்டல் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலைத்திட்டம் 06.06.2024 வியாழக்கிழமை இன்று உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி வீதி அபிவிருத்தி திட்டத்திற்கு நிதியை வழமூகிய கௌரவ இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் அவர்களுக்கு கொண்டச்சி மக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# YMFE ஏற்பாட்டில் பாரிய சிரமதானமும் பயன்தரும் மர நடுகையும்





(உமர் அறபாத்)

2024 ம் ஆண்டுக்கான உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏறாவூர் இளையோர் ஊடக மன்றத்தின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள் 05ஃ06ஃ2024 புதன்கிழமை இடம்பெற்றன.

ஏறாவூர் இளையோர் ஊடக மன்றத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான டீ.எம்.உமர் அறபாத் தலைமையில் ஏறாவூர் வாவிக்கரை பிரதேசத்தில் ஏறாவூர் நகரசபையுடன் இணைந்து பாரிய சிரமதான நிகழ்வு ஒன்று காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஏறாவூர் நகரசபையின் விஷேட ஆணையாளர் எம்.எச்.எம்.ஹமீம் கலந்து சிறப்பித்ததுடன் சுற்றுச்சூழலை நேசிக்கக்கூடிய பலரும் இச்சிரமதான பணியில் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சிரமதான நடவடிக்கையின் போது சூழலுக்கு தீங்கினை ஏற்படுத்தும் பொலித்தீன் பைகள்,பிளாஸ்டிக் போத்தல்கள் அகற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, ஏறாவூரில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி பாலர் பாடசாலைகளில் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகளுடன் மாணவச் செல்வங்களின் சுற்றாடலுடன் தொடர்புபட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# றூமி ஹாசீம் பௌண்டேசன் ஏற்பாட்டில் பல்கலை தெரிவான மாணவர்களுக்கு கௌரவம்










(பீ.எம்.முக்தார்)

இவ் வருடம் வெளியான க.பொ.த.உயர்தர பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தையும் மேல் மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று பேருவளைக்கு புகழ் சேர்த்த ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் நகர் விஞ்ஞான கல்வி செயற் திட்டத்தில் இணைந்து கல்வி பயிலும் மாணவியான கே.எப்.பாத்திமா நிஹ்லா மற்றும் வைத்தியத்துறை உட்பட பல துறைகளுக்கும் பல்கலைக்கழகம் தெளிவான மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று தர்கா நகர் விஞ்ஞான கல்வி செயற் திட்டத்தின் ஏற்பாட்டில் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தர்கா நகர் விஞ்ஞான கல்வி செயற்திட்ட ஸ்தாபகரும் ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் தலைவருமான டொக்டர் ரூமி ஹாஷிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புத்திஜீவிகள், விஞ்ஞான கல்வி செயல்திட்ட ஆசிரியர்கள்,நிர்வாகிகள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் பங்கு பெற்றினர்.

மாணவியின் முயற்சி சாதனைகளை இங்கு உரையாற்றிய பலரும் பாராட்டிப் பேசியதோடு தர்கா நகர் விஞ்ஞான கல்வி செயல்திட்டத்தின் சார்பில் மாணவிக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன. டாக்டர் ரூமி ஹாஷிம் அதன் செயலாளர் ஜெஸ்ீக் அஹமட் மற்றும் மேற்படி கல்வி நிலைய ஆசிரியர்கள் இணைந்து வழங்கினர்.

# வவுனியா தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து 7 பேர் பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதி

(ஐ.ஏ. காதிர் கான்)

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, வவுனியா - இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் 3 பாடங்களிலும் அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்ற அஜந்தன் தனுசன் என்ற மாணவரும், கலைப் பிரிவில் கல்வி பயின்ற சபீனா சிவகுமார் என்ற மாணவியுமே இவ்வாறு "3ஏ" அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து இம்முறை வர்த்தகப் பிரிவிலிருந்து 5 பேரும், கலைப் பிரிவிலிருந்து 14 பேருமாக மொத்தம் 19 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், இதில் 7 பேர் பல்கலைக் கழக நுழைவிற்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில், வர்த்தகப் பிரிவில் பிரதீபன் மதுராங்கன் (ஏசீபீ), ஜெய்கீசன் சஞ்சுதன் (ஏபீசீ), டிலானி கேதீஸ்வரன் (பீசீ2) மற்றும் கலைப் பிரிவில் ஜதுஷா மோகன்ராஜ் (பீ2ஏ), சங்கவி சிவகணேஷ் (சீ2பீ) ஆகிய மாணவ மாணவிகளும் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள குறித்த ஏழு மாணவ மாணவிகளும், இப்பாடசாலைக்கும், அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாமிற்கும், தமது பெற்றோர்களுக்கும் பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்துள்ளனர் எனவும், இவர்களது இச்சிறப்பு வெற்றிக்கு பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே பிரதான காரணியாகும் எனவும், அதிபர் திரு. மாணிக்கம் அரிபூரண நாதன் புகழாரம் சூட்டியுள்ளார்.

# வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை முஸ்லிம் முப்படை வீரர்களுக்கு இலவச ஹஜ் வாய்ப்புகளை வழங்கிய சவூதி அரசாங்கம்



வரலாற்றில் முதல் தடவையாக, இந்த ஆண்டு (2024) ஹஜ் கடமைகளை மேற்கொள்ள இலங்கை முப்படையைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர்களுக்கு சவூதி அரசாங்கம் வாய்ப்பு வழங்கியுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானிக்கு விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த அரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, சவூதி அரேபிய தூதுவர் சவூதி அரசாங்கத்திடம் இருந்து அனுசரணை மற்றும் சிறப்பு கோட்டாக்களை பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ததை தொடர்ந்து முதன்முறையாக முஸ்லிம் முப்படை வீரர்கள் ஐவருக்கு சிறப்பு கோட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தென்னகோன் (ஜுன் 07) சவூதி அரேபிய தூதுவர் அல்கஹ்தானியை கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துடன், முப்படை முஸ்லிம் உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காக சவூதி தூதுவருக்கும் விசேடமாக சவூதி அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தமைக்கு நன்றி தெரிவித்த சவூதி அரேபிய தூதுவர், எதிர்வரும் ஆண்டுகளில் பாதுகாப்புப் துறை பணியாளர்களுக்கான ஒதுக்கீட்டை மேலும் அதிகரிப்பதில் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்துவதாக தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் இலங்கை முஸ்லிம் பாதுகாப்புப் படையினருக்கும் 'உம்ரா' புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும் என்றும் சவூதி தூதுவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் உதவுவதற்கு சவூதி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், இது தொடர்பில் இந்நாட்டு அதிகாரிகளுடன் நெருக்கமாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை ஹஜ் குழு உறுப்பினர் மில்பர் கபூர் மற்றும் ஹஜ் யாத்திரை மேட்கொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இராஜாங்க அமைச்சருடன் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

# கிரிக்கெட் சபைத் தலைவர் ஷம்மி சில்வா அட்டாளைச்சேனை விஜயம்



(எம்.எப். நவாஸ்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில், கடின பந்து கிரிக்கெட் பயிற்சி முகாமொன்று அண்மையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளரும் தொழிலதிபருமான ஆதம்லெப்பையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி முகாமுக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா பிரதம அதிதியாகக் கலந்து கொண்துடன், கிரிக்கெட் சபையின் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

மேலும் இந்நிகழ்வுக்கு இப் பிரதேச கழகங்களும் வீரர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வீரர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்காக எதிர்காலத்தில் தங்களது தேவைகளை நிறைவேற்றி தருவதாக தெரிவித்தார். என்பது குறிப்பிடத்தக்கது.





அல் குத்புல் அக்பர் வல் கௌஸுல் அஷ்ஹர் இமாமுனா அபுல் ஹஸன் அலி அஷ் ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் ஞாபகார்த்தமாக ஷாதுலிய்யா தரீக்கா மத்ரஸாக்கள் மத்தியில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் பங்கு பற்றி அதில் தெரிவானவர்களுக்கு காலி நாவின்ன அலிய்யா அரபுக் கல்லூரி யில் நடைபெற்ற மனாகிப் தமாம் மஜ்லிஸில் பரிசிலும் சான்றிதழும் வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்கள் . கலீபதுல் குலபா மௌலவி முஹம்மது ஸஹூர் பாரியிடமிருந்த மாணவர்கள் பரிசு பெறுவதை காணலாம். (பீ.எம். முக்தார்)

# தாஹிரா சபியுதீன் வைத்திய அத்தியட்சகராக நியமனம்



(பர்ஹானா பதுறுதீன்)

பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகராக ஏறாவூரைச் சேர்ந்த வைத்தியர் தாஹிரா சபியுதீன் அண்மையில் (07) நியமனம் பெற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஏறாவூர் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பொறியியலாளர் எஸ்.எல். ஹாலிதீன் அவர்களின் சகோதரியுமாவார்.




பயாஸா பாஸில்



# துல்ஹஜ்ஜின் மகத்தான முதல் பத்து நாட்கள்

ஒவ்வொரு மாதமாய் கடந்துவந்து மாதங்களிலெல்லாம் இறுதி மாதமான துல்ஹஜ் மாத ஆரம்பத்தில் இருக்கின்றோம்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்திக் காட்டி, அதில் வெற்றி கண்ட மார்க்கம் இஸ்லாமாகும்.

இஸ்லாத்தில் சொல்லப்பட்ட ஒவ்வொன்றையும் தமது வாழ்க்கையில் எடுத்து நடந்தால் அவர் புனிதராக இறை நேசராக ஆகிவிடலாம்.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் அல்லாஹ்விடத்தில் மற்ற நாட்களை விட மிக மகத்தான நாட்கள். மற்ற நாட்களில் செய்யப்படுகின்ற அமலை விட, இந்த 10 நாட்களில் செய்யப்படுகின்ற அமல்கள் அல்லாஹ்விடத்தில் மிக விருப்பமானது.

துல்ஹஜ் மாதத்தின் முதற் பத்து நாட்கள் மிகவும் சிறப்புக்குரியன. அந்த நாட்களில் அமல்கள் செய்வதை சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த முதல் பத்து நாட்களும் சிறப்புக்குரியவை என்று சிலாகித்துக் கூறிய நபி (ஸல்) அவர்கள் இதற்கென்று விசேடமாக ஏதாவது அமல்களைக் காட்டித் தந்துள்ளார்களா? என்றால் அப்படி ஏதும் ஹதீஸ்களில் கிடையாது.

தனிப்பட்ட விசேட அமல்கள் இல்லா விட்டாலும் வழமையாக நாம் செய்து வரும் அமல்களை பூரணமாகவும், சரியாகவும் செய்து வர முயற்சி செய்ய வேண்டும். பர்ளான தொழுகைகளை ஜமாஅத்தோடு தொழுது வருவது. பர்ளுடைய முன்–பின் ஸுன்னதுக் களை பேணித் தொழுது வருவது, தொழுகைக்குப் பின் ஓதக் கூடிய அவ்ராதுகளை சரியாகத் தொடராக ஓதி வருவது, காலை–மாலை நேரங்களிலும், ஓய்வு கிடைக்கும் போதும் குர்ஆனை ஓதிக் கொள்வது நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துகளை ஓதிக் கொள்வது குறிப்பாக அந்த பத்து நாட்களிலும் பாவமான விடயங்களை விட்டும் ஒதுங்கி நல்லறங்கள் செய்வதில் தங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும் இந்த துல்ஹஜ் மாதத்தைப் பொறுத்தவரை ஹஜ் கடமைகள் ஒரு முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. ஹஜ் காலத்தில் அந்த குறிப்பிட்ட நாட்களில் செய்யப்படும் அமல்களுக்குப் பகரமாக அல்லாஹ் சுவர்க்கத்தைப் பரிசாக வழங்குகிறான். துல்ஹஜ் பிறை 8–லிருந்து பிறை 10 வரை குறிப்பிட்ட ஹஜ் கடமைகள் முடி வடைந்து விடுகின்றன.

இதில் 9ஆம் நாளான அரபா நாள் ஹாஜிகளுக்கும், ஹஜ் செய்யாமல் அவரவர் ஊரிலே தங்கியிருக்கும் அடியார்களுக்கும் மிகவும் முக்கியமான நாளாகும். ஏன் என்றால் பல நாடுகளிலிருந்து வந்த அனைத்து ஹாஜிகளும் ஒன்று கூடும் இடமாக அந்த அரபா மைதானம் அமைந்துள்ளது.

அன்றைய நாள் ஹாஜிகள் ஒன்று கூடுவதின் மூலம் அந்த மைதானத்திற்கும் ஹாஜிகளுக்கும் சிறப்பு கிடைக்கிறது.

அந்த அரபா நாளன்று நோன்பு பிடிப்பது ஊரில் உள்ளவர்கள் மீது நபி (ஸல்) அவர்கள் ஸுன்னத்தாக நடை முறைப்படுத்தியுள்ளார்கள். அன்றைய நாளில் நோன்பு பிடிப்பது மூலம் அடியார்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது என்பதை பின்வரும் நபிமொழி நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

"எவர் அரபா நோன்பை பிடிக்கிறாரோ அவர் ஒரு வருட முன் செய்த பாவத்தையும் பின் ஒரு வருட பாவத்தையும் (அல்லாஹ்) மன்னிக்கிறான்." (முஸ்லிம்)

துல்ஹஜ் மாதத்தின் 10ம் நாள் ஹஜ் பெருநாளாகும். அன்றைய நாள் சிறப்புக்குரிய நாளாகும். குறிப்பாக பெருநாள் தொழுகையை தொழுது விட்டு அல்லாஹ் விற்காக குர்பான் கொடுப்பதின் மூலம் இன்னும் அன்றைய தினம் இதன் மூலம் அமல்கள் அலங்கரிப்படுகிறது. அந்த இறைச்சியின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏழைகள் சந்தோசமாக அன்றைய நாளை கழிப்பதற்கு அமைந்து விடுகிறது. மேலும் அந்த 10ம் நாள் அதிகாலையிலிருந்து தக்பீர், தஹ்லீல், தஸ்பீஹ் போன்ற திக்ருகளை செய்வதின் மூலம் அதிகமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.



அரபாத் பஹுர்தீன்

# தொடர் தோல்வியால் சுப்பர் 8 சுற்றை கேள்விக்குறியாக்கியிருக்கும் இலங்கை அணி

9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரின் குழு டீ இற்கான மிக முக்கியமான போட்டியில் பங்களாதேஷ் அணியிடம் போராடி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்ற இலங்கை அணியின் சுப்பர் 8 சுற்று கேள்விக்குறியாகியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெற்றுவரும் 9ஆவது ரி20 உலகக்கிண்ணத் தொடரில் குழு டீ இல் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தனது முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணியுடன் மிக மோசமான தோல்வியை பதிவு செய்திருந்தது. இந்நிலையில் இன்றைய தினம் இலங்கை நேரப்படி காலை 6 மணிக்கு இடம்பெற்ற 15ஆவது லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை டல்லஸ் மைதானத்தில் எதிர்கொண்டது. இப்போட்டியில் வென்றாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துடன் இலங்கை அணி களமிறங்கியிருக்க போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் இலங்கை அணியை துடுப்பாடப் பணித்தது.

இதற்கமைய களம் நுழைந்த இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களான பெத்தும் நிஷங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஜோடி களம்நுழைய குசல் மெண்டிஸ் 10 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். அடுத்து வந்த கமிந்து மெண்டிஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் கொடுத்தார். அடுத்துவந்த தனஞ்சய டி சில்வா ஆரம்பீரரான பெத்துமுடன் இணைந்து ஓட்ட வேகத்தை சற்று உயர்த்தியிருக்க பெத்தும் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்த போட்டியில் இலங்கை அணி 14 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்ங்களைப் பெற்று வலுவான நிலையிலிருக்க சரித் அசலங்க 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த அணித்தலைவரான வனிந்து ஹசரங்க கோல்டன் டக் ஆகி ஏமாற்றம் கொடுக்க சற்று நம்பிக்கை கொடுத்த தனஞ்சய டி சில்வா 21 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட பின்வரிசையில் சானக்க (3) தீக்சன (0) மெத்யூஸ் (16) என நிலைக்காமல் போக இலங்கை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் முஸ்தபிசுர் மற்றும் ரிஷ ாட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றினர்.

பின்னர் 125 என்ற மிக இலகுவாக வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் கண்ட பங்களாதேஷ் அணிக்கு முன்வரிசை வீரர்கள் ஏமாற்றம் கொடுத்த போதிலும் மத்திய வரிசையில் வந்த லிட்டன் தாஸ் மற்றும் தவ்ஹீட் ஹரிடோய் ஆகியோர் பொறுப்புடன் ஆடி 36 மற்றும் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க பின்வரிசையில் வந்த அனுபவமிக்க வீரரான முஹம்மதுல்லாஹ் ஆட்டமிழக்காமல் 16ஓட்டங்களை அடித்துக் கொடுக்க பங்களாதேஷ் அணி 19 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றியைப் பதிவு செய்தது. பந்துவீச்சில் நுவான் துஷார 18 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.

இப் போட்டியிலும் தோற்ற இலங்கை அணி 2ஆம் சுற்றான சுப்பர் 8 சுற்றுக்குச் செல்வது கேள்விக்குறியாகியுள்ளதுடன் , அடுத்த 2 போட்டிகளில் அயர்லாந்து மற்றும் நேபாள் அணியை இலங்கை அணி எதிர்த்தாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிலிங்கா பாணியில் பந்துவீசி மாலிங்கவை ஈர்த்துள்ள பைனாஸ்

உலகை திரும்பி பார்க்க வைத்துள்ள இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வேகப்பந்து வீச்சாளருமான லசித் மாலிங்கவினால் பாரட்டப்பட்டுள்ள சிலிங்கா என அழைக்கப்படும் பந்துவீச்சு பாணியினைக் கொண்ட சிறுவன் பைனாஸ் இன்று இலங்கை கிரிக்கெட் ரசிகர்களால் பாராட்டப்பட்டு வருகின்றார்.

அனுராதபுர மாவட்டத்தில் ஹொரவ்பொத்தான பிரதேசத்தில் பத்தாவை அல் ஹமாஸ் கிரிக்கெட் கழகத்தில் ஹொரவ்பொத்தான கிரிக்கட் வாரியத்தியில் பதிவு செய்யப்பட்ட நிக்கவெவ கிரிக்கட் கழகத்தில் மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட மென் பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் விளையாடி, சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்ட அல் ஹமாஸ் கழகத்தில் விளையாடிய இச்சிறுவன் தான் பைனாஸ்.

அதுமட்டுமல்லாமல் நமது நாட்டு முன்னாள் கிரிக்கட் வீரர் லசித் மாலிங்கவின் பணியில் பந்தை வீசி லசித் மாலிங்கவினால் அவரது முக நூல் பக்கத்தில் பைனாஸ் பந்துவீசும் காணொளியை பதிவேற்றி இச் சிறுவன் தொடர்பான தகவல்களைக் கோரியிருந்தார். இதனால் சிறுவன் பைனாஸ் சமூக வலைத்தளத்தில் புகழ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மாகாண மட்டப் போட்டிகளில் தடம் பதிக்கும் மிணுவான்கொடை அணிகள்



மிணுவாங்கொடை வலயமட்ட 18 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் கல்எலிய அலிகார் தேசிய பாடசாலை அணியுடன் 2:1 என்ற பெனால்ட்டி கோல்களின் அடிப்படையில் போராடித் தோற்ற மிணுவான்கொடை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அணி 2ஆம் இடத்தினைப் பெற்றதுடன் மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவாகியது. அத்துடன் இப்பாடசாலையின் 16 வயதிற்குறப்பட்ட அணியும் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

நடப்பு ஆண்டுக்காண மிணுவாங்கொடை வலய மட்ட போட்டிகள் தற்சமயம் ஆரம்பித்து இடம்பெற்றுவருகின்றன. அதற்கமைய கடந்த (05,06) ஆகிய இரு நாட்களாக இடம்பெற்ற 18 பாடசாலை அணிகள் பங்கேற்றிருந்த 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைப்பதாட்ட போட்டித் தொடரில் முதல் சுற்றில் பொரலுபிட்டிய பாடசாலை அணியை வீழ்த்தியதுடன் 2ஆம் சுற்று போட்டியில் மினுவான்கொடை ஜனாதிபதி கல்லூ ரியை வீழ்த்தி மிணுவாங்கொடை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றிருந்தது. அதற்கமைய அரையிறுதிப் போட்டியில் பலமிக்க மீரிகம எ.எஸ். சேனநாயக்க கல்லூரி அணிக்கு இலகு வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் கால்பதித்தது அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அணி.

இதற்கமைய ஹ்ʻனுமுல்ல சீ.டபில்யூ. டபில்யூ. கன்னங்கரா மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பலமிக்க கல்எலிய அலிகார் தேசிய பாசாலை அணியை எதிர்த்தாடியது. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் விறுவிறுப்பிற்குப் பஞ“சமஜல“லாமல“ செல“ல இரு அணிகளாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போக முதல்பாதி கோலின்றி சமநிலை பெற்றது.

பின்னர் இடம்பெற்ற தீர்மானமிக்க 2ஆம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தமது பாடசாலையின் வெற்றிக்காக முனைப்போடு வெற்றி கோலுக்கான போராட்டத்தில் தீவிரம் காட்டினர். இருப்பினும் முழு நேர ஆட்டம் நிறைவடைய எந்தவித கோல்களும் இரு அணியாலும் உட்செலுத்தப்படாமல் போக ஆட்டம்சமநிலை பெற்றது. இதன் விளைவாக வெற்றியாளரை தீர்மாணிக்க பெனால்டி உதை வழங்கப்பட இதில் கல்எலிய அலிகார் தேசிய பாடசாலை அணி 2:1 என்ற பெனால்டி கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் போராட்டமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய மிணுவான்கொடை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அணி 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவானது.

மேலும் நேற்று நிறைவு பெற்ற 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான போட்டியில் இறுதிப் போட்டி முழுநேர ஆட்டம் மற்றும் பெனால்டி உதைகள் என்பன சமநிலை பெற வெற்றியாளரைத் தீர்மானிக்க நாணயச்சுழற்சி இடம்பெற்று அதில் தோற்றுப் போன அல் அமான் 2ஆம் இடத்தைப் பெற்றதுடன் மாகாண மட்டப் போட்டிக்கு தன் வரவை உறுதிப்படுத்தியது. அத்துடன் இன்றைய தினம் இபபோட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி கோட்ட மட்ட வொலிபோல் தொடர்: சம்பியன் மகுடங்களை அள்ளிச் சுருட்டிய பள்ளிவாசல்துறை மு.ம.வித்தியாலயம்



கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 16,18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட வொலிபோல் போட்டித் தொடரில் பள்ளிவாசல்துறை முஸ்லீம் மகா வித்தியாலய அணி சம்பியன் பட்டங்களை அள்ளிச் சுருட்டி அசத்தியது.

பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் புத்தளம் வலயத்திற்குறப்பட்ட கல்பிட்டிக் கோட்டக் கல்விப் பணிமனையின் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான வொலிபோல் போட்டி ஆசிரிய ஆலோசகர் எஸ்.ஐ.எம். பலீல் தலைமையில் நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் சுமார் 20 பாடசாலைகள் பங்கேற்றிருந்தது.

அதற்கமைய 20 வயதுக்குறப்பட்ட போட்டியின் இறுதிப் போட்டிக்கு பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலய அணியும், திகழி முஸ்லிம் வித்தியாலய அணியும் மோதின. மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்விறுதிப் போட்டியில் முதல் செட்டில் ஆதிக்கம் செலுத்திய பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலய அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 1:0 என முன்னிலை பெற்றது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது செட்டில் சற்று சுதாகரித்துக் கொண்ட திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலய அணிக்கு சிறந்த போட்டியைக் கொடுத்த போதிலும் பலமிக்க பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலய அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொள்ள விறுவிறுப்பான இறுதிப் போட்டி 25:19 மற்றும் 25:23 என்ற நேர் செட்களில் பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வசமானதுடன் நடப்பாண்டின் சம்பியன் கிண்ணமும் அவர்கள் வசமாகிப்போனது. அதற்கமைய திகழி முஸ்லிம் வித்தியாலய அணி 2ஆம் இடத்தினைப் பெற்றுக் கொள்ளஇ அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி 3ஆம் இடத்திற்குத் தெரிவானது.

அத்துடன் முன்னர் நிறைவு பெற்ற 16 மற்றும் 18 வயதுக்குட்பட்ட போட்டிகளிலும் பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தினை வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய இம்மாணவர்களுக்கு பயிற்றுவித்த ஆசிரியர் ஏ.எச்.எம்.ரஜப்தீன், பயிற்றுவிப்பாளர் எம்.என்.எம். சராப், கே.ஏ.பீ.எஸ். சஞ்சீவ மற்றும் பாடசாலை அதிபர் உட்பட பாடசாலை நிருவாகத்தினருக்கு பாடசாலை சமூகம் நன்றியைத் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.